சுருக்கம்

பணியமைப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.பா.நிஷா, இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந1) துறை

அரசாணை (ப) எண்.44

நாள் 17.03.2023
சுபகிருது, பங்குனி 3
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டன:-

1. சமூக நல ஆணையரின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 25243/நிர்4(3)/ 2017, நாள் 10.12.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. சமூக நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.35903/நிர்4(3)/2019, நாள் 20.08.2020, 11.02.2022 மற்றும் 08.08.2022.

*******

ஆணை:-

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திருமதி.எ.ஹெலன் பென்சுலா ஜாய் என்பவர் 14.06.2009 அன்று பணியிடை மரணமடைந்ததால், அன்னாரது வாரிசும் மகளுமான திருமதி.பா.நிஷா என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு 09.07.2009 அன்று விண்ணப்பம் செய்ததைத் தொடர்ந்து, இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றிதழ், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்பதற்கான சான்றிதழ், தனியரின் கல்வித் தகுதி மற்றும் பிறந்த தேதி 24.05.1994 என்பதற்கான சான்றிதழ், தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான (S.S.L.C.) சான்றிதழ் ஆகியவற்றின் அடிப்படையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட

குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் (பொ)
கிள்ளியூர்

செயல்முறை நடவடிக்கைகளில் திருமதி.பா.நிஷா என்பவரை இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் பணியிடம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பணியிடத்தில் 12.12.2018 முற்பகல் முதல் தனியர் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 12.12.2018 முற்பகல் முதல் அன்னாரது பணியினை மேற்கண்ட பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் சமூக நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. சமூக நல இயக்குநரின் கருத்துருவை உரிய விதிகளின்படி அரசு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த போது 14.06.2009 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி.எ.ஹெலன் பென்சுலா ஜாய் என்பவரின் வாரிசும் மகளுமான திருமதி.பா.நிஷா என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி அன்னாரது தாயார் காலமான நாளிலிருந்து (14.06.2009) மூன்று ஆண்டுகளுக்குள் அதாவது 09.07.2009 அன்று விண்ணப்பிக்கும் போது 18 வயது நிறைவு செய்யவில்லை என்பதாலும், பணிநியமனம் பெறும் முன்னர் திருமணம் ஆகியுள்ளது என்பதாலும், திருமதி.பா.நிஷா, இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் என்பவர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள 'கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பிக்கும் போது 18 வயதை பூர்த்தி செய்ய வேண்டும்' என்ற நிபந்தனையை தளர்வு செய்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன் பிரிவு 58ஐ பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு-15 (திருமணமாகாத மகள்), பிரிவு 20(6)(b) (குறும வயது) மற்றும் பிரிவு 28(2) (பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் வழங்குவது) ஆகிய பிரிவுகளை தனியர் பொருட்டு தளர்வு செய்தும், திருமதி.பா.நிஷா என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 12.12.2018 முற்பகல் முதல் அன்னாரது பணியினை வரன்முறை செய்யலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

3. திருமதி.பா.நிஷா, இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம் என்பவரின் பணியானது இளநிலை உதவியாளர் பதவியில் 12.12.2018 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்படுவதால் தனியருக்கு கிடைக்கக்கூடிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதர படிகள், நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அதனை பெறுவதற்கு விதிகளின்படி தனியர் தகுதியுடையவர் ஆகிறார்.

குழந்தை வளர்ச்சி தி. அலுவலர் (மபு)

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.1397/ட்டி-1/2023, நாள் 28.02.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திருமதி.பா.நிஷா,
இளநிலை உதவியாளர்,
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்,
திருப்பரங்குன்றம்,
மதுரை மாவட்டம்,
(சமூக நல இயக்குநர் சென்னை-15, வழியாக).
சமூக நல இயக்குநர், சென்னை-15.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை-13.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை - 18.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
நகல்
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் - மகளிர் உரிமை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்
துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி) துறை, சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ட்டி-1) துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரிப் படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/03/2023
பிரிவு அலுவலர்

குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்
கிள்ளியூர்
21.4.23
21/4/23